**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2026ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02– ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| O.S.No. | : 63/2022 | வா.சா. | : 1 |
| பெயர் | : திரு. சுப்பிரமணியம் | | |
| த/பெ. | : திரு. அம்மாசைக்கவுண்டர் | | |
| கிராமம் | : | சாதி | : |
| தாலுக்கா | : | சமயம் | : |
| வயது | : 70 | தொழில் | : |

<u>**முதல் விசாரணை :**</u>

நான் இந்த வழக்கில் வாதி. முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாகத் தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தை எனது முதல்விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். 19–03–2015 தேதியிட்ட தாவா அயிட்டம் –1 சொத்தின் பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகவும், 16–05–1973 தேதியிட்ட தாவா அயிட்டம் –2 சொத்தின் கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2ஆகவும், தாவா அயிட்டம் –1 சொத்தின் பட்டா இணைய நகல் வா.சா.ஆ.3ஆகவும், தாவா அயிட்டம் –2 சொத்தின் சிட்டா மற்றும் "அ" பதிவேடு இணைய நகல் வா.சா.ஆ.4 ஆகவும், 27–03–2021 தேதியிட்ட வாதியின் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது அசல் வா.சா.ஆ.5ஆகவும், 29–11–2021 தேதியிட்ட வாதியின் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது அசல் வா.சா.ஆ.6ஆகவும், 10–08–2020 தேதியிட்ட வாதியின் பெயரில் உள்ள தண்ணீர் வரி ரசீது அசல்

வா.சா.ஆ.7 ஆகவும், 29-11-2021 தேதியிட்ட வாதியின் பெயரில் உள்ள தண்ணீர் வரி ரசீது அசல் வா.சா.ஆ.8ஆகவும், 12-04-2021 தேதியிட்ட வாதியின் பெயரில் உள்ள மின்சார ரசீது அசல் வா.சா.ஆ.9 ஆகவும், 17-06-2021 தேதியிட்ட வாதியின் பெயரில் உள்ள மின்சார ரசீது அசல் வா.சா.ஆ.10 ஆகவும், வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.11 ஆகவும், அஞ்சல் ஒப்புதல் அட்டை ( 3 எண்கள் ) அசல் வா.சா.ஆ.12 ஆகவும் குறியீடு செய்யவேண்டுகிறேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.